JAFFNA ... SEP 7 1945 VADDUKODDAI, CEYLON.

**Rates**

*Subscription*: Rs. 6 per year. (including postage)

Single copy: 15 cts. (including postage)

*Advertisements*: On application.

*'In Memoriam'*: (within 4 inches) Rs. 5 per insertion.

*'Order Nisi'*: Rs. 3 per insertion.

# THE MORNING STAR

Registered as a Newspaper | ( Established 1841 ) | Published every Friday

VOL. 105 | JAFFNA, FRIDAY, SEPTEMBER 7, 1945. | NO. 35.

**Notice**

Please send all editorial correspondence as well as all business matters to Tellippalai. This will ensure prompt attention.

RIGHTEOUSNESS EXALTETH A NATION, BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.

## NEWS

### LOCAL

#### Reforms in Education

Consequent on the decision of the State Council to implement two of the New Education Proposals, Managers of Assisted Schools have been circularised by the Director to inform him before Sept. 15th if they wish to go into the New Scheme by Oct. 1st this year. Such schools have been asked to introduce the vernacular as the medium of instruction by stages so that by May 1946 the lower department of the school may satisfy the new regulation.

#### A Seedling from Gaya Bo-Tree

A seedling from the original Bo-tree at Buddhagaya, India, which had grown from a seed brought from there by Mr. H. Sri Nissanka, K. C, was planted with all due reverence and ceremony at the Sailabimbarama Temple, Dodanduwa on Wednesday evening.

It was conveyed in perahera from the Railway Station amid great rejoicing.

#### Malayan Relief Fund in the North

A meeting of the chief residents of the Valikamam West Division, Jaffna District, was held at the Chankanai Village Committee building on August 24, presided over by the Divisional Revenue Officer of the area.

A Representative Committee of the whole Division was appointed to collect funds for Malayan Relief. Mr. A. T. Vethaparanam, Chairman, Village Committee, Vaddukoddai, was appointed President, Mr. T. Subyah, Udaiyar, of Chankanai, Secretary; and Mr. M. Ponnambalam Treasurer of the Committee.

The funds collected are to be used for the relief of Malayan evacuees irrespective of community. The meeting resolved that Government should be called upon to state what sort of relief it was prepared to afford to Malayan evacuees.

#### Water rationed in Kayts

Since last month there has been an acute shortage of water in the Kayts area. The continued failure of rains from early part of June has dried up all the wells in the area. It is learnt that the Government Agent Mr. C. Coomaraswamy has made arrangements with the naval authorities to supply water in lorries from Naranthanai, three miles from Kayts. An officer of the Kachcheri is in charge of the rationing of water.

#### Wedding

The marriage of Miss Alice Muttumany Thambyrajah, a daughter of Mr. V. R. Thambyrajah F. M. S. Pensioner, and Mrs. Thambyrajah of "Melita". Jaffna Town and Mr. Ramanathan Areyaratnam, Asst. Shroff, Kandy was solemnised at St. Peter's Church Jaffna, on Monday 3rd inst. The Rev. James S. Mather conducted the service assisted by the Rev. M. S. Chinniah and the Rev. A. C. Thambyrajah. The bride's parents had a reception at their residence in Hospital Road, which was largely attended.

#### Personal

At a quiet initiation ceremony held at Mahajana English School, Tellippalai, on Monday, Mr. T. T. Jayaratnam, B. A., has been installed as Headmaster of the School. Mr. Jayaratnam is the son of the late Mr. Taylor Thuraiappah, the Founder of the School.

—Dr. (Miss) Kandiah, daughter of Dr. Kandiah, Medical Superintendent Civil Hospital, Jaffna, has been appointed to the Staff of the Hospital in place of Dr. Richard, who is transferred to Mandapam.

#### Obituary

We are sorry to record the death which occurred last Sunday of Mr. A. T. Arumairatnam, retired Malayan Pensioner. The funeral took place the next day at Kadduvan, at the residence of Mrs. Vythilingam, sister of Mrs. Arumairatnam. Rev. J. V. J. Arnold officiated at the service. The deceased leaves behind besides his wife, five daughters, three sons, a sister Mrs. R. N. Knight of Irupalai and 4 brothers all of whom are in Malaya.

—The death occurred at Alaveddy last Friday at the ripe age of 86 of Ponnammah Vettivelu, relict of the late Mr. Vettivelu, who was a teacher in the Methodist Mission. The deceased lady was herself a teacher in the Methodist Mission having last served as teacher and later as Matron at the Vembadi Girls' School. The funeral took place the next day at Alaveddy. Rev. J. V J. Arnold officiated assisted by Mr, J. J. Ratnarajah, The two daughters of the deceased lady pre-deceased her a few years ago,

—We regret to record the untimely death of Miss Florence Rajadevi Rajaratnam, the eldest daughter of Mr. and Mrs. P. E. Rajaratnam of H. M. Customs on Wednesday the 29th August. She was educated at Vembadi Girls' School, Jaffna and was a pupil nurse undergoing training at the General Hospital at the time of her death. At the residence and graveyard the services were conducted by Rev. S. Veerakathipillai. At the Kannate Cemetery one hundred and fifty nurses gave a guard of honour while the leading nurses carried the coffin. She leaves behind, her parents, brothers, a sister and a host of relations to bemoan her loss.

### INDIAN NEWS

#### Enthronement of New Metropolitan

The Rt. Rev. Dr. George S. Hubback was enthroned as Metropolitan of India, Burma and Ceylon and Bishop of Calcutta last Saturday evening at St. Paul's Cathedral. The enthronement ceremony was conducted at St. Paul's Cathedral by the Archdeacon of Calcutta and was attended by the Governor of Bengal, Mr R. G. Casey and Mrs. Casey. Dr. Hubback has been Bishop of Assam since 1924 and was elected in June last to succeed Dr. Foss Westcott. A Committee headed by Dr. M. R. Jeyakar issued an appeal the same day on the occasion of the retirement of Dr. Foss Westcott for a purse of one lakh of rupees to be presented to him as a token of appreciation of his life long services as a bridge builder between the British and Indian peoples for use in some good cause in which he may be interested. The Treasurer of the Fund, known as the "Westcott Purse Fund" is Sir Frederick James, Scindia House, New Delhi.

#### Travancore Council and Church Union

The Travancore Council discussed the subject of Church Union on the 23rd of August and finally 90 voted for the scheme and 79 against it. The motion, therefore, failed to secure the requisite 75 per cent majority.

#### The Madras University Convocation

"It is an evil day that finds the fountain of learning denying its gifts to people who devoutly seek for them and it is up to the University to provide for education for all qualified students without distinction of class, caste, creed or colour. The State by itself cannot cope with the immensity of the problem without the plentiful aid of private munificence. What our University needs now is more Nuffields and more Tatas" said Mr. Justice K. P. Lakshmana Rao in the course of his address at the Convocation of the Madras University held recently. Sir A. Lakshmanaswami Mudaliyar, the Vice Chancellor presided. One [illegible] hundred and fourteen candidates took their degrees, [illegible] in absentia.

#### ORIGIN OF THE ATOMIC BOMB

The atomic bomb hunt began right after the war got under way when a German mathematician, a Jewish woman, Lize Meitner, calculated that something which had puzzled scientists for ten years was really an explosion of the atoms of the metal uranium.

Within two weeks after she published this calculation great physics laboratories of the United States, England and Germany had verified her prediction. She was banished from Germany shortly afterwards but Hitler put all available physicists at work on atomic bombs and atomic power at the "Kaiser Wilhelm Institute" in Berlin.

What the scientists found was that the rare form of uranium known as 235 when bombarded with low electrical energy (in the form of neutron rays) would react by splitting some of its atoms almost squarely in two.

##### Never Smashed Before

Up to that time no atom had ever been really smashed. A few electrons or other particles had been forced out by smashing rays which used to be either X'rays or rays made of atomic particles.

When uranium atomic split in two, as the German woman had predicted, a whole new world opened for atomic power. The energy released by an atom breaking in two was thousands of times greater than the energy when just a few pieces were chipped off.

This new situation started the United States and Great Britain on a hunt for atomic power and atomic bombs and even before the United States entered the war all this atomic work was placed under censorship. Since then not a single development has been published until the first bomb was dropped on Japan.

*S. Herald.*

**FOR SALE**

Paddy fields, 32acres in extent, at 5th Channel, Kilinochi, called Proctor Chinniah's Farm.

Please apply for details to:-

**J. V. Chelliah,**
Vaddukoddai.

34—3.

**DIANA & Co., LTD.**

SPORTS SPECIALISTS

**92, CHATHAM STREET, FORT, COLOMBO.**

*TELEGRAMS*: "DIANA" COLOMBO.
*TELEPHONE*: COLOMBO 3932.

15th Aug. 1945.

This is to inform all Schools, Clubs and Customers who have been kindly patronising us in the Northern Province, that in future all our sports goods can be obtained at Colombo prices from our Agency Office:—

**MESSRS. JUNO & CO.,**
**45, MAIN STREET, JAFFNA.**

(*Sgd.*) P. C. CHAWLA,
*Managing Director,*
**Diana & Co.**

33—3

**In Affectionate Remembrance**
of
**RAJA SPENCER**
**Departed: 27—8—1943.**

He is not dead the child of our affection,
But gone into that School,
Where he no longer needs our poor protection,
And Christ Himself doth rule.

35—1

**THE SHOP FOR THE BEST BOOKS**

General and Regional Geography by *Unstead and Taylor.*
Geography of Ceylon by *E. K. Cook.*
Introduction to Tropical Botany by *M. J. LeGoc.*
Light and Sound by *Stewart.*
Heat, Light, Sound and Magnetism and Electricity by *Mackenzie.*
A Class Book of Physical Chemistry by *Lawry and Sagden.*
Introduction to Organic Chemistry by *E. J. Holmyard.*
Higher Algebra by *Hall and Knight.*
Pitman's Shorthand New Era Edition.

**THE C. L. S. BOOK SHOP,**
**First Cross Street, Jaffna.**

**BOOKS OF SPECIAL INTEREST**

"THE CASTES, CUSTOMS, MANNERS AND LITERATURE OF THE TAMILS" — BY **SIMON CASIE CHETTY.**
*Price Re. 1 - 00; (Postage Cts. 25).*
A work of great interest to students of this subject.

"OUR PLACE IN THE CIVILISATION OF THE ANCIENT WORLD" — BY **K. BALASINGHAM.**
*Price Cts. 75; (Postage extra).*
A lecture covering a wide field of historical inquiry.

**GENERAL PUBLISHERS LTD.,**
20, Parson's Road, Fort. P. O. Box 305, Colombo.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீதி இராச்சியத்தாரை உயர்த்தும்; பாவமோ எந்தச்சனங்களுக்கும் இகழ்ச்சி.**

# புதினக் குறிப்புகள்

---

### காலநிலை

இடைக்கிடை மப்பும் மந்தாரமுங் காணப்பட்டாலும் மழையையோ காணவில்லை. சகலருடைய கண்களும் வானத்தை நோக்கிக்கொண்டிருக்கின்றன.

### நல்லூரில் ஐக்கிய கிறிஸ்த போதனு கல்லூரியின் திறப்புவிழா

பெண்களின் ஐக்கிய போதனுசாலையும், சாவகச்சேரியிலுள்ள ஆண்களின் போதனுசாலையும், அரசடிப் போதனுசாலையும் நல்லூரிலே சென்ற பெப்புறவரி மாசம் ஒன்ருய்ச் சேர்க்கப்பட்ட அன்றே ஐக்கிய கிறிஸ்த போதனு கல்லூரி ஆரம்பமாயது. சென்ற ஆகஸ்ற் மாசம், கல்லூரியின் 2 ம் தவணை முடிவிலே ஆரம்ப அப்பியாசங்கள் ஓானவில் நடைபெற்றன.

மேற்குறித்த மூன்று போதனுசாலைகளும் காலஞ்சென்றபோன திரு. H. S. பெறிருவின் ஆலோசனையின் பேரிலும், உதவியின் பேரிலும் அதிகமாய் நம்பித்தான் ஒன்ருக்கப்பட்டவையாதலினுல், அத்தருணத்தில் அவர் சமுகங்கொடுக்க முடியாதபடி மரணத்தினுற் பிரிக்கப்பட்டதினுல் போதனுகல்லூரியார் அதிக விசனமுற்றிருந்தனர்.

இத்திறப்பு விழா ஓர் ஸ்தோத்திர ஆராதனையுடன் தொடங்கியது. அவ்வாராதனை கனம். சோமசுந்தரம், கனம் ஜேம்ஸ் மேதர் எனும் போதகர்மாரால் நடத்தப்பட்டது. அதன்பின் கல்லூரி நண்பர்கள் யாவரும் சிற்றுண்டி, பான முதலியவற்ருலுபசரிக்கப்பெற்றனர் அதே நேரத்திற் கல்லூரி மாணவரும், சாதனுபாடசாலைப் பிள்ளைகளும் கோலாட்டம், "டிறில்" அப்பியாசங்கள், பந்தாட்டம் முதலிய விளையாட்டுகளைக் காண்பித்தனர்.

அடுத்து நடைபெற்ற பிரசித்த கூட்டத்தில் வடமாகாண அரசியற் தலைவர் பீடம் வகிக்க, மூன்று பிரசாரணங்கள் கனம். J. T. அருளானந்தம், நகர சங்கத்தலைவர், சைவபோதனு கல்லூரித் தலைவர் என்போரால் நிகழ்த்தப்பட்டன.

கல்லூரித் தலைவர் திருவாளர் அரசிங்கம் தமது வரவேற்புப் பிரசாரணத்தில் அரசாங்கம் தன் சனங்களுக்குக் கல்வியைக் கொடுக்கவேண்டிய உத்தரவாதத்தைத் தற்போது உணர்ந்திருக்கிறதினுல் வடமாகாண அதிபரும் நகரசங்க அதிபரும் அத்தருணத்திற் சமுகங்கொடுத்ததைவிட்டு அதிக அக்களிப்புடன் அவர்களை வரவேற்கிறேனெனக் குறிப்பிட்டார்............மேலும் கிறிஸ்த போதனு கல்லூரி அரசாங்கத்துக்குக் கொடுக்கக்கூடிய விசேஷ காரியமுண்டென்றும் தற்போதிருக்கும் அரசியல் நிலைபரங்களிலே கிறிஸ்த போதனுகல்லூரியும் நிலைபெறவிடப்படுமென நம்புகிறேனென்றுஞ் சொல்லி முடித்தனர்.

அதன்பின் கனம். J. T. அருளானந்தமும், திருவாளர்கள் பொன்னம்பலமும் சுவாமிநாதனும் தங்கள் குறிப்புரைகளைக் கூறிமுடித்தனர். அவைத்தலைவர் போதனு கல்லூரியின் முன்னேற்றத்தைவிட்டுத் தலைவரைப் புகழ்ந்துகொண்டார். அதன்பின் மாணவிகளுடைய அப்பியாசங்கள் நடைபெற்றன. அத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

### மரணம்

மலாயாவில் றெயில்வே பகுதியில் உத்தியோகத்திலமர்ந்திருந்து, சுகவீன காரணமாகத் தமது உத்தியோகபதவியை விட்டு உபகாரவேதனத்துடன் வந்து சில வருஷங்களாகத் தெல்லிப்பழையில் வசித்துவந்தவராகிய திரு. A. T. அருமைநாதன் என்பவர் இந்தமாதம் 2ந் திகதி ஞாயிற்றுக்கிழமை இரா இவ்வுலகவாழ்வை விட்டு மறுமைக்குட் பிரவேசித்தனர்.

பிரேதசேம ஆராதனை வீட்டிலும் சேமக்காலையிலும் அடுத்தநாள் சாயந்தரம் திரளான சுற்றமித்திரர் சமுகத்திலே கனம். J V. J. ஆனல்ட் அவர்களால் நடத்தப்பட்டது. கனம். S. சோமசுந்தரம் அவர்கள் ஆராதனையில் பங்குபற்றினர். பின்பு இவரது சடலம் தெல்லிப்பழை சேமக்காலையில் பூமிதானஞ்செய்யப்பட்டது.

—இவருடையபிரிவாற் தயருறும் இவரது மனைவி, பிள்ளைகள், இனசனர் யாவரையும் எம்பெருமான் ஆறுதற்படுத்துவாராக.

அளவெட்டிவாசரும் "பொன்னுக்குஞ்சியாச்சி" யென யாவராலும் அறியப்பட்டிருந்தவருமாகிய மிசிஸ். பொன்னம்மா வெற்றிவேலு என்னும் வயோதிப மாதா தமது 85ம் பராயத்தில் இவ்வுலகசீவியத்தை முடித்துச் சென்ற ஆவணிமாசம் 31ந் திகதி மறுமைக்கேகினு. இவ பல வருடங்களாய் உவெஸ்லியன் மிஷனின் கீழ் வேம்படிப் பெண்பாடசாலையில் ஆசிரிணையாயும் பிள்ளைகளின் மேற்பார்வைக்காரியாயும் ஊழியஞ்செய்தபின் வேலையினின்று இளைப்பாறித் தம் சொந்த ஊராகிய அளவெட்டியில் வசித்துத் தம்மை ஆட்கொண்ட யேசுபெருமானுக்குச் சாட்சிகூறிவந்தா. இவ எப்பொழுதும் மரணத்துக்கு ஆயத்தமாகவும் தம் இரட்சகரின் அழைப்பு எப்போ வருமென்னும் வாஞ்சை யுடையவவுமாயிருந்தாவென்று இவவுடன் சம்பாஷித்த யாவருஞ் சாட்சிகூறுவர். இவவுடைய பெண்மக்கள் இருவரும் இவவுக்கு முந்தியே மறுமைக்கழைக்கப்பட்டுவிட அவர்களுடைய பிள்ளைகளும் பிள்ளைகளின் பிள்ளைகளும் இலங்கையிலும் மலாய்நாட்டிலும் வசிக்கின்றனர். இவவுடைய பிரேதசேம ஆராதனை திரளான சுற்றமித்திரர் சமுகத்தில் கனம் J. V. J. ஆனல்ட் போதகராலும் திரு. இரத்தினராசா பிரசங்கியாராலும் நடத்தப்பட்டது இவவுடைய பிரிவினுற் துயரமடையும் யாவருக்கும் ஆண்டவர் ஆறுதலளிப்பாராக.

### தாய்ப்பாஷைமூலம் கல்வியூட்டல்

நந்தேசத்தின் புதிய கல்வித்திட்டத்தின்படி சகல பாடசாலைகளிலும் தாய்ப்பாஷைமூலம் கல்விபயிற்றும்முறை எதிராய்வரும் ஐப்பசிமாசம் 1ந் திகதி தொடக்கம் அனுசரிக்கப்படவிருக்கின்றது. இது மிகவுசிதமானமுறையென்று சர்வசம்மதமாயேற்றுக்கொள்ளப்பட்டாலும் ஆரம்பத்தில் இதை அனுசரிப்பதிற் சில கஷ்டங்களேற்படக்கூடும். நாட்டுப்புறங்களில் ஒரே பாஷைக்காரர்மாத்திரம் வசிப்பதினுல் கிராமப்பாடசாலைகளில் இம்முறை இலகுவாய்க் கைக்கொள்ளப்படக்கூடும். ஆனுல் பல வித்தியாசமான பாஷைக்காரரையடக்கிய நகர்ப்புறங்களிலிருக்கும் பாடசாலைகளில் ஒரேவகுப்பிலுள்ள மாணவரில் தமிழைத் தாய்ப்பாஷையாகவுள்ள சிலரும், சிங்களத்தைத் தாய்ப்பாஷையாகவுடைய சிலரும் ஆங்கிலத்தைத் தாய்ப்பாஷையாகவுடைய சிலருமிருக்கக்கூடும். அப்படியிருந்தால் எப்பாஷையில் அவ்வகுப்பு மாணவருக்குக் கல்விபயிற்றவேண்டுமென்னும் கேள்வியுண்டாகக்கூடும். ஆதலால் வித்தியாகர்த்தர் இவ்விஷயத்தைப்பற்றிப் பாடசாலைகளுக்கு ஒரு சுற்றுநிருபமனுப்பியிருக்கின்றனர். அச்சுற்றுநிருபத்தின்படி பாலர் வகுப்புகளிலும் 2ம் வகுப்பிலும் 1945ம் ஆண்டு ஐப்பசிதொடக்கம் தாய்ப்பாஷையிற் கல்விபயிற்றல்வேண்டும். 3ம் 4ம் வகுப்புகளில் 1946ம் ஆண்டு தைமாசம் அம்முறை அனுசரிக்கப்படல்வேண்டும். 5ம் வகுப்பில் 1946ம் ஆண்டு வைகாசிமாசத்தில் மேற்படி ஒழுங்கு பாவிப்புக்குவரல் வேண்டும். அதை அனுசரிப்பதில் நேரிடக்கூடிய கஷ்டங்களைப்பற்றி வித்தியாகர்த்தருக்கு அறிவித்தால் அவசியம் செய்யவேண்டிய திருத்தங்களைச் செய்வதற்கு அவர் அனுமதிகொடுப்பார்.

### வேலையில்லாத் திண்டாட்டம்

யுத்தம்முடியும்போது நந்தேசத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் நேரிடுமென்று யாவரும் நினைத்திருந்தனர். அரசாங்கசபையிலும் பலமுறை இவ்விஷயம் பேசப்பட்டது. ஆனுல் அதை நிவிர்த்தி செய்வதற்கான ஒழுங்குகள் இன்னும் செய்யப்படவில்லை. இப்பொழுதுதான் நம் பிரதிநிதிகள் இதைப்பற்றி ஆரவாரப்படுகின்றனர். சென்றவாரம் கொழும்பில் தேயிலை, றப்பர் முதலியவைகளோடு சம்பந்தப்பட்ட வேலைகளிலேற்படுத்தப்பட்டிருந்த வேலையாட்களிற் சிலர் வேலையிலிருந்து விடப்பட்டனர். அதனுல் அவர்களும் அவர்களோடு அனுதாபங்கொண்டவர்களுமாக ஏறக்குறைய ஆயிரம் வேலையாட்கள் அரசாங்கசபை மண்டபத்தின் முன் நின்று ஆரவாரம்பண்ணினர். இப்பொழுது இவ்விஷயம் சாத்திரமாய் யோசிக்கப்படுகிறது. இதுவரையும் இராணுவத்தோடு சம்பந்தப்பட்ட முயற்சிகளிலேற்பட்டிருந்த இலட்சக்கணக்கானேர் தம வேலைகளை இழந்துவரும்பொழுது அவர்களுக்கு ஏற்றவேலைகளை அரசினர் தேடிக்கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதற்காகப் பல வகையான கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவும் கட்டிடமுயற்சிகளைத்தொடங்கவும் ஆலோசனைகள் நடைபெறுகின்றன.

### இலங்கை அரசியற்திட்டம்

இலங்கையின் புதிய அரசியற்திட்டம் ஏறக்குறைய முற்றாய் ஒழுங்குசெய்யப்பட்டுவிட்டதென்றும், இங்கிலாந்திலும் சனப்பிரதிநிதிகள் சபையோடு பிரபுக்கள் சபையுமிருப்பதுபோல இலங்கையிலும் அரசாங்கசபையோடு சட்டநிறைவேற்றச் சபையுமொன்று அமைக்கப்படுமென்றும் செய்திகள் வந்திருக்கின்றன.

### யுத்தகால பிரமாணங்கள்

இலங்கையின் பாதுகாப்புக்காக உண்டாக்கப்பட்ட பிரமாணங்களிற் சில இப்பொழுது நீக்கப்பட்டுவிட்டன. அப்படி நீக்கப்பட்ட பிரமாணங்கள் எவையென்று சென்றவாரம்வெளியான அரசாங்க கசெற் பத்திரத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

### நெற்செய்கை

இலங்கையின் நெற்செய்கையைப்பற்றிக் கிருஷிப்பகுதி உத்தியோகஸ்தரிலொருவராகிய டக்டர் W. R. C. போல் ஒரு சிறு துண்டுப்புத்தகம் எழுதியிருக்கிருர். இலங்கையில் 10 இலட்சம் ஏக்கர் நிலத்தில் நெற்செய்கைநடத்தி ஏக்கர் ஒன்றுக்கு 75 புசல் நெல்லு விளைவிப்பதே நம் இலக்காயிருக்கவேண்டுமென்று அப்பத்திரத்திற் கூறப்பட்டிருப்பதோடு அந்த இலக்கைக் கிட்டிச்சேர்வதற்கு என்ன செய்யவேண்டுமென்றும் அதிற் காட்டப்பட்டிருக்கிறது. அவர் தம் உத்தியோக சம்பந்தமாய் இலங்கையின் பல பாகங்களையுஞ் சந்தித்து ஒவ்வொரு பகுதியிலும் நடைபெறும் கிருஷிகமுறைகளை ஆராய்வுசெய்திருப்பதினுல் அவர் கூறும் முறைகள் நந்தேசத்துக்கு ஏற்றவையாயிருக்குமென்பதற்கையமில்லை. அவர் எழுதிய துண்டுப்புத்தகம் இலங்கை அரசினரால் அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கிறது. கமத்தொழில் விருத்தியிற் கரிசனையுள்ள யாவரும் அதைவாசித்து நம்நாட்டுக்கு வேண்டிய உணவு முழுவதையும் இங்கேயே விளைவித்துக்கொள்ளத் தெண்டிப்பார்களாக.

### புடவைக் கட்டுப்பாடு

நல்லதினிசான நூலினுல் நெசவுசெய்யப்பட்ட புடவைகளை இந்தியாவிலிருந்து ஏற்றுமதிசெய்யாதபடி இந்திய இராசாங்கம் கட்டுப்பாடுசெய்திருப்பதினுல் சென்னபட்டினத்திலுள்ள புடவை வர்த்தகசங்கம் அதைப்பற்றி அதிகாரிகளுக்கு மனுப்பண்ணியிருக்கின்றது. இப்பொழுது யுத்தம் முடிந்து சகல தேசத்தவர்களும் தத்தம் வியாபாரங்களை விருத்திசெய்ய முந்திநிற்கின்றனரென்றும் இத்தருணத்திற் தமக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் நீக்கப்படாவிட்டாற் தம் வியாபாரமுயற்சிக்குப் பங்கமுண்டாகுமென்றும் இலங்கைக்குப் புடவை அனுப்பும் விஷயத்திற் செய்யப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் உடனே நீக்கப்படவேண்டுமென்றும் அவர்கள் கேட்டிருக்கின்றனர். கட்டுப்பாட்டு அதிகாரி அவர்களுக்கு மறுமொழியாக முழு இந்தியாவின் நன்மையையுங்கருதியே அக்கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டனவென்றும் கூடியசீக்கிரம் அவைகளை நீக்கிவிடத் தெண்டிப்பேனெனவுங் கூறியிருக்கின்றனர்.

### குண்டுவீச்சினுல் நேர்ந்த சேதம்

ஐக்கியநாட்டியார் வீசிய வெடிக்குண்டுகளினுல் யாப்பானிலுள்ள 206 நகரங்களில் 44 நகரங்கள் முற்ருய் அழிந்து போயின. யாப்பானிலுள்ள குடிசனத்தில் ஆறிலொருபங்கு சேதமானது. 22,10,000 வீடுகள் அழிந்தும் எரிந்தும் போயின. இரண்டு நகர்களிற் போடப்பட்ட அணுப்பிரளயக் குண்டுகள் இரண்டினுலும் இறந்தோர் 90,000. காயப்பட்டோர் 1,80,000. சாலவகையான குண்டுகளாலும் இறந்தோர் 2,60,000. காயப்பட்டோர் 4,12,000. அணுப்பிரளயக் குண்டினுற் தாக்கப்பட்டோர் சொற்ப காயமடைந்த சுகசாலிகளாய்த் தோற்றினுலும் இரண்டு மூன்று வாரங்களில் அவர்களும் இறக்கின்றனராம்.

### அமெரிக்காவின் கடன் திட்டம்

மகாபெரிய உலகயுத்தம் நடைபெற்ற காலத்தில் ஐக்கிய கட்சியைச்சேர்ந்த நாடுகளுக்கு வேண்டிய தொகையை அமெரிக்க ஐக்கியதேசம் கடன்கொடுக்கலாமென்றும் யுத்தம் முடிந்தவுடன் அக்கடன் அறவிடப்படலாமென்றும் காலஞ்சென்ற றூஸ்வெல்ற் பிரசாதிபதி ஒழுங்கு செய்திருந்தார் அவ்வொழுங்குப்படி சென்ற ஆனிமாசம் முடிய ஐக்கியகட்சியாருக்குக் கொடுக்கப்பட்ட கடன் 4200 கோடி டலர். இப்பொழுது யுத்தம் முடிந்தபடியால் இனிமேல் கடன்கொடுக்கிறதில்லையென்றும் கொடுக்கப்பட்ட கடன் அறவிடப்படவேண்டுமென்றும் அமெரிக்க இராசாங்கம் தீர்மானித்துவிட்டது. அதனுல் இங்கிலாந்திற் பெரிய பணக்கஷ்டமுண்டுபட்டிருக்கிறது. இக்கஷ்டத்தை நீக்குவதற்கேற்ற முறைகளை அமெரிக்க ராசாங்கத்துடன் யோசித்து நிறைவேற்றும்படி ஆங்கிலேய பிரதிநிதியொருவர் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டிருக்கிருர். இப்பொழுது அமெரிக்க பிரசாதிபதியாயிருக்கும் ருறுமன் என்பவரும் ஆங்கிலேயருக்குச் சார்பாயிருக்கிருரென்று விளங்குகிறது. கடன்கொடுக்கும் ஒழுங்கைச் சடுதியாய் நிறுத்தினுல் ஐக்கியகட்சியைச்சேர்ந்த நாடுகள் கடனைத் தீர்ப்பதற்காகத் தம் வியாபாரத்தை விருத்திசெய்யத் தெண்டிக்குமென்றும் அதனுல் வியாபாரவிஷயத்தில் அவைகள் ஒன்றுடனென்று போட்டிபோட நேரிடுமென்றும் இவ்வித போட்டி இன்னெரு பெரிய யுத்தத்தை வருவிக்கக்கூடுமென்றும் அவர் கூறியிருப்பதனுல் இங்கிலாந்துக்கு அனுகூலமான ஒழுங்குகள் செய்யப்படுமென்று கருதப்படுகின்றது.


**யாழ்ப்பாண மிருக உணவுச்சாலை**

பெரியதெரு — யாழ்ப்பாணம்

**மிருகங்களின் உணவுவகைகளுக்கு வருந்தவேண்டாம்**

எம்மால் விற்பனை செய்யப்படும் தவிடு, கடலை, உழுந்து, பருப்பு, சோதுமை முதலியவற்றை மாவாக்கிக் கலந்த உணவை உங்கள் குதிரை, ஆடு, எருது, பசு முதலியவற்றிற்கு உணவாக வைத்து அதனுல் இலாபத்தையும் நன்மையையும் அடையுங்கள்.

விலை விபரங்களுக்கு எமக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

த. இராசரத்தினம்,
லோ லைப்ஃறறியன் சொந்தக்காரர்.

34—24



**70 வருஷங்களுக்கு மேற்பட்ட அனுபவம் ...**



1872ம் ஆண்டுக்கு முன் இங்கிலாந்திலே முதல் ஹம்பர் துவிச்சக்கரம் செய்யப்பட்டது. ஹம்பர் துவிச்சக்கரத்தில் சிறப்பட்ட வரிகளும், பெலனும், இலேசும் இன்று அதனுடைய நீண்ட அனுபவத்தையும் அது செய்கை பண்ணப்பட்ட திறமையையும் காட்டுகின்றது.

ஹம்பர் துவிச்சக்கரத்தின் வரத்து மட்டுப்படுத்தப்பட்டாலும் அதற்குத் தேவையான மறுபகுதிகள் கிடைப்பதனுல் ஹம்பர் துவிச்சக்கரத்தை யுடையோர் தொந்தரவு இல்லாமல் அதைப் பாவிக்கலாம்.

**ஹம்பர்**

மில்லர்ஸ் லிமிடெட், ஹம்பர் துவிச்சக்கரஏஜண்டுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிமல்குக அன்பு பெருகுக
தேசமெங்கனுந் தீமையருகுக
பாசநீக்கிப் பவித்திரமேயருள்
யேசு நாமமே என்றென்று மோங்கவே

உதயதாரகை

1945ம் ஷ செப்ரெம்பர் மீ 7 உ

## விலையுயர்ந்த முத்து

"விலையுயர்ந்த முத்து" என்னுந் தொடர்மொழி வித்தியாசாலைகளிலும் வித்தியாவிருத்தி சம்பந்தமாய்க் கூட்டப்படும் பகிரங்க கூட்டங்களிலும் இந்நாட்களில் அதிகமாய்ப் பாவிக்கப்பட்டுவருவதினுல் இலங்கை அரசாங்கசபையார் இத்தேசத்தவர்க்குக் கொடுக்கத் தீர்மானித்திருக்கும் இலவச கல்வியே இக்கும் விலையுயர்ந்த முத்தெனக் கருதப்படுகிறதென நம் பத்திராதிமானிகள் யாவரும் இலகுவில் விளங்கிக்கொள்ளக்கூடும். நம் கல்விமந்திரியாயிருக்கும் கவுரவ கன்னங்காரதம்மாற் சிபாரிசுசெய்யப்பட்டிருக்கும் இலவச கல்வியை விலையுயர்ந்த முத்துக்கு உவமிக்கத்தொடங்கின நாட்தொடக்கம் அது விலையுயர்ந்த முத்துத்தானு என்பதைப்பற்றிப் பல வித்தியாசமான அபிப்பிராயங்கள் கூறப்பட்டுவருகின்றன.

இப்பொழுது அரசாங்கசபையாற் செய்யப்பட்டிருக்கும் தீர்மானப்படி சர்வகலாசாலையிலும் மற்ற அரசினர் பாடசாலைகளிலும் எதிராய்வரும் ஐப்பசிமாசம் முதலாந் திகதிதொடக்கம் எல்லா வகுப்புகளிலும் இலவசமாய்க் கல்விபயிற்றப்படவேண்டும். உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும் இலவச கல்விபயிற்ற விரும்பினுல் மூன்று வருஷத்துக்குள் அவ்வாறுசெய்யத் தொடங்கவேண்டும். அவைகள் இலவச கல்விபயிற்றச் சம்மதித்தால் அங்கு வேலைகொள்ளப்பட்டிருக்கும் உபாத்திமாரில் வித்தியாபகுதியால அங்கீகரிக்கப்படும் உபாத்திமாரின் முழுச்சம்பளமும் பாடசாலைகளின் பிற செலவுகளுக்காக ஓர் சிறுதொகைப்பணமும் உதவி நன்கொடையாக அரசினராற் கொடுக்கப்படும். சம்மதியாவிட்டால் அவைகளுக்கு அரசினரால் எவ்வித உதவிநன்கொடையும் கொடுக்கப்படமாட்டாது.

மேலே காட்டப்பட்டபடி அரசாங்கசபையார் கொடுக்கத் தீர்மானித்திருக்கும் நன்கொடை பாடசாலைகளைத் திறமையாய் நடத்துவதற்குப் போதியதல்லவென்றும், வித்தியாவேதனம் வாங்காமல் அரசினரின் நன்கொடைபோடுமாத்திரம் பாடசாலைகளை நடத்தினுல் அப்பாடசாலைகளிலூட்டப்படும் கல்வி விலையுயர்ந்த முத்தாயல்ல, கீழ்த்தரமான போலி முத்தாகவே இருக்குமென்றும் வித்தியாசாலைகளை நடத்தும் முகாமைக்காரர் கூறுகின்றனர். வித்தியாமந்திரியோ பாடசாலை அதிகாரிகளையும் முகாமைக்காரரையும் கள்ளரும் கொள்ளைக்காரருமாக மதித்து அவர்கள் தம் நீண்டகால அனுபவத்திலிருந்து கூறியவற்றை ஏற்றுக்கொள்ளாமல் தம்முடைய ஒழுங்குப்படி கொடுக்கப்படவிருக்கும் இலவச கல்வி மிக விலையுயர்ந்த முத்தென்றும், மூன்று வருடத்துக்குள் அவ்வொழுங்கை ஏற்றுக்கொள்ளாதபாடசாலைகள் அரசினரின் நன்கொடை பெறமாட்டாவென்றும் தீர்த்துவிட்டிருப்பதினுல் இதுவரையும் பலவித கஷ்டநஷ்டங்களை அடைந்தாலும் திறமையான கல்வி பயிற்றுவதையே தம் இலக்காகக்கொண்டிருந்த பாடசாலை அதிகாரிகள் இனிச் செய்யக்கூடியதென்னவென யோசிக்கின்றனர். அவர்களிற் பலர் அரசினரின் உதவி கிடையாவிட்டாலும் தம் பாடசாலைகளின் உயர்நிலையைக் குறைக்கச் சம்மதியார். ஆதலாற் பல பாடசாலைகள் சுயதாபரிப்பில் நடத்தப்படநேரிடும்.

நம் கல்விமந்திரியார் கிறீஸ்த பாடசாலையிற் கல்விபயின்றவராதலால் அவராற் பாவிக்கப்பட்டுவரும் விலையுயர்ந்தமுத்து என்னும் தொடர்மொழி மத்தேயு சுவிசேஷம் 13ம் அதிகாரம் 46ம் வசனத்திலிருந்து எடுக்கப்பட்டதென்று அனுமானித்துக்கொள்ளலாம். அவ்வசனத்திற் குறிக்கப்பட்ட முத்தை வாங்கின வியாபாரி பலநாட்களாய் ஓர் நல்ல முத்தைத் தேடித்திரிந்தான். அது விலையுயர்ந்ததென்று கண்டதினுலேயே அதைவாங்கினுனன்றி அதை வாங்கும்படி எவராவது அவனைப் பலவந்தப்படுத்தவில்லை. கல்விமந்திரியாரின் முத்துக்கும் அவ்விதம் நடைபெறல் தகாதா? அரசினர் பாடசாலைகளில் இலவசகல்வியைப் பயிற்றவும், உதவிநன்கொடைபெறும்பாடசாலைகள் விரும்பினுல் இலவச கல்வித்திட்டத்தை ஏற்கவும் விரும்பாவிட்டால் இப்போது கொடுக்கப்படும்விதமான உதவிநன்கொடையைப் பெறவும் ஒழுங்குசெய்தல்கூடாதா! அப்படிச் செய்யும்பொழுது அரசினர் பாடசாலையிற் கொடுக்கப்படும் கல்வி விலையுயர்ந்த முத்தென்று கண்டால் நந்தேசத்திலுள்ள பெற்றூர் உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளுக்குத் தம் பிள்ளைகளை அனுப்புவார்களா! மாணவருடைய பெற்றூரின் ஆதரவின்றி ஓர் பாடசாலை நடைபெறுதல் கூடியகாரியமா? விலையுயர்ந்தமுத்து இலவசமாய்க் கிடைக்கக்கூடியதாயிருக்கும்போது அதைத் தள்ளிவிட்டு, விலைகொடுத்துக் கீழ்த்தரமான முத்தை வாங்க எவராவது விரும்புவாரா? விலையுயர்ந்த முத்தை வாங்கச்செய்வதற்குப் பலாத்காரமும் பயமுறுத்தலும் வேண்டியதில்லையே. கல்வி மந்திரியோ மூன்று வருஷத்துக்குள் இலவசக்கல்வித்திட்டத்தை அங்கீகரியாத பாடசாலைகளுக்கு உதவிநன்கொடை கிடையாதென்கிறூர். மேலும் இலவசக்கல்வித்திட்டத்தை அனுசரிப்பதனுல் நேரிடக்கூடிய செலவு எவ்வளவென்பதைப் பற்றி அபிப்பிராயபேதங்களேற்பட்டிருக்கின்றன. அச்செலவு முழுவதையும அரசிறைவருமானத்திலிருந்து கொடுப்பது முடியாக்காரியமென்றுஞ் சிலர் அபிப்பிராயப்பட்டனர். ஆதலால் இத்திட்டம் படிப்படியாய் அனுசரிக்கப்படுதல் புத்தியாகாதா? காலஎல்லைகுறித்து அவ்வெல்லைக்குள் இத்திட்டத்தை ஏற்கும்படி பாடசாலைகளை நெருக்கவேண்டிய அவசியமென்ன? இந்த முத்தின்விலையை மதிக்கக்கூடியவர் இப்பொழுதிருக்கும் கல்விமந்திரியார்மாத்திரந்தானு? இவர் தம்பதவியிலிருந்து நீங்குவதற்குமுன் இம்முத்தை யாவரும் வாங்கிப்போடவேண்டுமா? ஓர் முத்தின் விலையை அறியாதவர்களுக்கு அம்முத்தைப் பலவந்தமாய்க்கொடுத்தல் பன்றியின்முன் முத்தைப் போடுதல்போலாகுமென்று மத்தேயு 7ம் அதிகாரம் 6ம் வசனத்திற் காட்டப்பட்டிருக்கிறது. ஆதலால் நம் கல்விமந்திரியார் ஆயத்தஞ்செய்து வைத்திருக்கும் முத்தையும் அதன் விலையைமதிக்கமாட்டாத பாடசாலை அதிகாரிகள் மூன்று வருடத்துள் வாங்க வேண்டுமென அவர்களை நெருக்காமல், அம் முத்தை மந்திரியார்பொறுப்பில் நடைபெறுவனவாகிய அரசினர் பாடசாலைகளில்வைத்து, அதன் பிரபையினுல் யாவருங் கவரப்பட்டு அதை வாஞ்சையாய்த்தேடிப்போய்ப் பெற்றுக்கொள்ளச்செய்வதே தகுதி.

## யப்பானிய சக்கரவர்த்தி ஹிரோஹிதோ

யப்பானிய சக்கரவர்த்தி ஹிரோஹிதோ தமது [illegible] பரிபத்தை மீறி 1921ம் ஆண்டு தமது பரிசுத்தமான பூமியைவிட்டு, ஐரோப்பாவுக்குவிஜயஞ்செய்தபோது இருதருணங்களிலே தமது மெய்க்காவலரைவிட்டு வெளியேறினர்: (1) பாரிசில் ஒரு இரவைக்கழித்தபோதும், (2) லண்டனிலுள்ள குழாய்ப் புகைவண்டியிற் பயணஞ்செய்தபோதுமே.

குள்ளனுன இச்சக்கரவர்த்தியைக் குறித்துச் சரித்திரகாரன் கவனித்துப் படிக்கக்கூடியது அதிகமில்லை. ஆனுல் ஒரு மனுேதத்துவ சாஸ்திரியோ அதிகங் கற்றுக்கொள்ளக்கூடும். இவர் சூரிய தேவதையின் 124வது வழித்தோன்றலென யப்பானியர் சொல்லிக்கொள்வர். அவரது உயரம் 5 அடி 2 அங்குலம். அவரது கனம் 133 இருத்தல். லண்டனிலுள்ள ஒரு கடையிலே ஒருமுறை அவர் 50 டசின் கால்மேசுகளையும் உள்ளாடைகளையும் விலைக்குவாங்கினராம். ஒருமுறைதான் இவற்றை அவர் பாவிக்கலாம். அதன்பின் அவை இராசகுடும்பத்தின் அங்கத்தினருக்குக் கொடுக்கப்படவேண்டுமாகையினுலேதான் அவ்வளவு தொகையாக வாங்கப்பட்டது. அவர் ஐரோப்பாவிலிருந்து திரும்பியபின், அவரது நவீனகொள்கைகளையும் எண்ணங்களையுங் குறித்து யப்பானியர் பிரமித்தனர். அவர் ரோக்கியோ நகரத்துக்கு வெளியே சுற்றுமதிலுள்ளவோர் அரண்மனையில் வசித்தனர். அங்கு பந்துவிளையாட்டுக்குரிய இடங்கள் வகுக்கப்பட்டிருந்தன. அவரது பிதாவாகிய ரேஷோ சக்கரவர்த்தி 1922ம்ஆண்டு பயித்தியகாரனுன போது, முதலில் அவர் பதிற்சக்கரவர்த்தியாகிமூன்று வருஷத்தின்பின் சக்கரவர்த்தியாகினர். யப்பானிய சக்கரவர்த்திகள் பொதுவாகத் துரியநிலையை (Mysticism) அடைவது வழக்கம். ஹிரோஹிதோ ஓர் சாதாரணமான மெல்லிய குள்ளன். அரமனையில் அவர் சாதாரணமான சீவியஞ்செய்தனர். காலையில் அவர் 6 மணிக்குத் துயில்நீத்து எழுந்துவிடுவர். காலைப்போஜனமாக தோடம்பழரசமும், பன்றியிறைச்சியும், முட்டையுஞ் சாப்பிட்டு, காப்பி பானம்பண்ணுவர். அதன்பின் புதினப்பத்திரிகைகள் படிப்பர். மறுபடி ஒரு மணிநேரம் உலாத்தப்போவர்.

பத்துமணிக்குத் தமது மேசையண்டை உட்கார்ந்து, தமது அரசியல் விஷயங்களைக் கவனிப்பர். இதில் அவருக்கு அதிக கெட்டித்தனமில்லாததினுல, ஆறு காரியகாரர் அவர்பக்கத்திருந்து, காரியங்களை முற்றுவிக்க அவருக்குதவுவர். சீவிய சாஸ்திரம் (Biology) அவருக்கதிக உவப்பானபடிப்பு. மணித்தியாலக்கணக்காக அவர் பூதக்கண்ணுடியோடு விஷயங்களைக் கவனித்துப் படித்துக்கொண்டிருப்பர்.

மத்தியானப் போசனத்தின்பின் மந்திரிமாரோடு கலந்து உரையாடுவர். இதுவிஷயத்திலும் அவரது சக்தி அதிகங் குறைவானது. ஆனுற் சிற்சில வேளைகளில் அவர் சீறிச்சினந்துகொள்வதுமுண்டு. அதன்பின் அவர் Golf என்னும் ஆட்டம் ஆடுவர். Golf இலும் பார்க்க குதிரையேற்றத்திலே அவர் மிகக் கெடியர்.

தமது ஏராளமான சொத்துக்களைப் பராமரிப்பதிலும் பாதுகாப்பதிலும் அவருக் கிணையானவர்களில்லை. பின்னேரங்களில் மிகுதியாய்ப் பணவிஷயங்களைக்குறித்தே அலுவலாயிருப்பர். அவர் 2 லட்சம் பவுண் பெறுமதியானவர். அப்பணம் கமம் புலங்களிலும், பட்டணத்திலுள்ள ஆதனங்களிலும், கன்றுகாலிகளிலும், வர்த்தகப்பங்குகளிலும் போடப்பட்டிருக்கும். இரண்டு அணுப் [illegible] அவரது சொத் [illegible] நஷ்டம் நேர்ந்திருக்கும்.

## சுகாதாரம்

நீர் இரவில் படுக்கைக்குப் போகுமுன் பால் சாப்பிடுகிற வழக்கமிருந்தால் சர்க்கரைக்குப் பதிலாக தேனில் சில துளிவிட்டுச் சாப்பிடுவது மிகவும் நலம்.

இரவில் உமது குழந்தை விம்மி விம்மி அழுதால் அழும்பொழுது குழந்தையை தூங்க வைப்பது நன்றன்று. அழுகையை அமர்த்தினபின் தூங்க வைப்பதே நலம்.

பச்சை வெங்காயத்தைப் பிரதிதினமும் உமது மக்களுக்கு உணவுடன் தின்னக் கொடுப்பது, நலம்.

உமது மக்களைத் தலையில் குட்டுவதையும் கன்னத்தில் அடிப்பதையும் விட்டுவிடும். பிரம்பைக் கையாடுவதே நலம்.

## யப்பானைக் கைப்பற்றல்

சென்ற 3000 வருடகாலமும் யப்பான் இராச்சியத்தை எவராவது சொந்தமாக்கவுமில்லை, யப்பானியர் அன்னியதேச அரசுக்குத் தம்மை ஒப்படைக்கவுமில்லை. ஆகையால் சத்துருவசயிற் தம்மை ஒப்புவிப்பதெப்படியென்பது யப்பானியருக்குத் தெரியாது இப்பொழுதோ யப்பானிய அரசுக்கு முடிவுவந்திருக்கிறது. ரொகியோ ஓதங்கு குடாவில் நங்கூரமிட்டிருக்கும் மிசூறியென்னும் யுத்தக்கப்பலில் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நிபந்தனையற்ற ஒப்படைத்தற் பத்திரத்துக்கு யப்பானிய பிரதிநிதா கையொப்பமிட்டனர். அதன்பின் மக்ஆதர் தளபதி ரொகியோவுக்குச்சென்று யப்பானியரை நிராயுதபாணிகளாக்கி யப்பான்தேசம் முழுவதையும் தமது ஆளுகையின்கீழ்க் கொண்டுவருவதற்குவேண்டிய ஒழுங்குகளைச் செய்யத்தொடங்கினர். ஒப்படைத்தற் பத்திரத்துக்குக் கையொப்பமிடப்படுகையில் பிரித்தானியரும் அமெரிக்கரும்மாத்திரமல்ல, ருஷியா, பிரான்ஸ், நெதர்லாந்து, அவுஸ்திரேலியா முதலிய நாடுகளின் பிரதிநிதிகளுஞ் சமுகமாயிருந்தனர். பர்மா, சிங்கப்பூர், சீயம், பிலிப்பயின் முதலியவிடங்களிலே, நாம் இறக்க நேரிட்டாலும் நம்மையொப்புக்கொடுக்கச் சம்மதியோமெனச் சொல்லிக்கொண்டுநின்ற யப்பானிய தளபதிகளும் ஒருவர் பின்னொருவராய்த் தம்மை ஒப்புக்கொடுத்தனர். துன்னிலமாடு பொதிசுமக்கத் தடங்கியதுபோல யப்பானின் கர்வமும் அடங்கினது. சிங்கப்பூருக்குப் போகும்பாதையில் யப்பானியரால் மறைத்துவைக்கப்பட்ட வெடிக்குண்டுகள் இப்பொழுது அப்புறப்படுத்தப்படுகின்றன. இன்னுஞ் சிலநாட்களுக்குள் சிங்கப்பூருக்குக் கப்பற்போக்குவரவு ஏற்படுத்தப்பட்டுவிடும். யப்பானியராற் கைதிகளாக்கப்பட்டிருந்த ஐக்கியகட்சிச் சேனுவீரரும் சாதாரண சனங்களும் இப்பொழுது துரிதமாய்த் தத்தம் ஊர்களுக்கு அனுப்பப்படுகின்றனர்.

## திரவியக் கப்பல்

1782ம் ஆண்டில் திரிகோணமலையிலிருந்து விலையுயர்ந்த திரவியங்களையேற்றிச்சென்ற குறெஸ்வெனர் என்னும் வியாபாரக்கப்பல் தென் ஆபிரிக்ககரையில் ஆழிவாய்ப்பட்டது. கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தாருக்குரிய இக்கப்பலில் வைரரத்தினம், வைடூரியம், பதுமராகம் முதலிய நவரத்தினங்களடங்கிய 19 பெட்டிகளும் 420 பொற்பாளங்களும் 1450 வெள்ளிப்பாளங்களும் பலகோடி ரூபா பெறுமதியான வேறு திரவியங்களும் ஏற்றப்பட்டிருந்தன. டெல்லியிலிருந்து கொள்ளையடிக்கப்பட்டுவந்ததும் தங்கத்தாற் செய்யப்பட்டு முழுவதும் வைரரத்தினங்கள் பதிக்கப்பட்டதும் அக்காலத்திலேயே பல கோடிரூபா விலைமதிக்கப்பட்டதுமான மயிற்சிங்காசனமும் அக்கப்பலிலேற்றப்பட்டிருந்ததென்று பாரம்பரியம் கூறுகின்றது இக்கப்பல் கரையிலிருந்து 80 யார் தூரத்தில் அமிழ்ந்திருந்தாலும் அவ்விடத்தில் எப்பொழுதும் அலைகள் மூர்க்கமாயிருப்பதினுல் அத்திரவியத்தை எடுப்பதற்குச் செய்யப்பட்ட முயற்சிகள் வீணுயின. 20 வருடங்களின் முன் ஒரு சமுதாயத்தவர் ஒரு பிரமாண்டமான குழாயைச்செய்து அதைச் சமுத்திரத்துட் புகுத்தி அதன்வழியாய் அக்கப்பலின் அடிப்பாகத்தைக் கிட்டிச்சேர்ந்தும் அக்குழாய்க்குட் தண்ணீர் புகுந்தமையால் அவர்கள்பட்ட பிரயாசமும் செலவிட்ட பணமும் அவமாயின. இப்பொழுது பிரித்தானிய இஞ்சினியர் ஒருவர் அக்கப்பலிலுள்ள திரவியங்களை எடுப்பதற்கு முயற்சிசெய்கிறூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Morning Star

Friday, September 7, 1945.

## A MEMORABLE WEEK

With the signing of the historic "Instrument of Surrender" aboard the Missouri in Tokyo harbour on Sunday this week, the first week of September goes down to history as perhaps the most memorable week in world history. It was on the first of September, 1939, that the German Army crossed the Polish Frontier and precipitated the Second World War, and it was on September third the same year that Great Britain and France as guarantors of the integrity of Poland, by virtue of the agreement of March 1939, declared War on Germany, within a few hours of each other. It may also be recalled that the first enemy act of war against Great Britain was the sinking of the Liner, "Athenia" west of the Hebrides on the fourth of September. It was from this day onwards that Great Britain and the dominions realised that the struggle was to be a "total" war on the typical German pattern of ruthlessness and horror. It is also reported that it was from the seventh of September, 1940, that Germans turned to night bombing and for the next nine months, London was raided, it is said, on 82 out of 85 consecutive nights. It is very significant that this week which six years ago witnessed the unleashing of the dark forces of evil today sees the final annihilation and doom of these forces. With the surrender ceremonies in China, Singapore, Phillipines, Hongkong and at many other points, we witness today the final disintegration of the 3000 year old Japanese Empire. The week also brings to an end a war that began in reality not four but fourteen years ago when Japan, alleging as pretext an attempt by Chinese guerillas to mine the Japanese owned railway in Southern Manchuria, overran and annexed the frontier provinces of the Chinese Republic. China, thus, was the first power to take up arms against this spirit of militarism that menaced the whole world. Today we are at the end of this long and toilsome journey and witness with a sense of relief the final act in Japan's crumbled dream of a world empire.

Through these historic hours of this memorable week, it has been the privilege of all of us to live. But we have a responsibility too to fulfil. In the course of his brief speech that marked the end of the surrender ceremony, General Mac Arthur very solemnly has warned the world that this will be the *last chance* for humanity to devise some greater and more equitable system to ensure World Peace. "The problem" he said "involves a spiritual recrudescence, and the improvement of human character". It needs no stretch of imagination to see that the possibility of the recurrence of another conflict can never be entirely dismissed unless we actively pursue the good on a world scale as well as in our individual lives. It is only then that man would realise that human lives are not to be looked upon as pawns in a game which armed men can play and always win but as God's most everlasting gifts. We hope that this week, memorable as it is in history, will usher in such an era of "spiritual recrudescence".

## INDIVIDUAL FREEDOM THROUGH BASIC EDUCATION

[*The following is a summary of a public lecture delivered by Mrs. E. W. Ariyanayakam at the Jaffna Central College Hall.*]

"The Basic Scheme of education is a scheme of education from the cradle to extreme old age. Our struggle for freedom is founded on the principles of basic education. Education through work is an eminent, essential, and integral part in our struggle for freedom. Every man and woman must attain individual freedom before dreaming of national freedom; and, it is that form of education that gives every person political, economical, and intellectual freedom, which is basic education."

Further she said it was their aim to relieve the sufferings of the people as far as possible. It was their duty as the national workers of India to do it. National upliftment was coupled with the movement for national freedom. The Indian movement for national freedom was not one of yesterday or today. Though there have been much political development on the basis of non-violence though they have not achieved the full measure of success, yet the spirit of the movement was still alive for they have gained that inner strength which was essential in a country's struggle for freedom.

That inner strength could only be gained by individual freedom. It was the national spirit, born of inner strength and individual freedom, that kept alight the torch of freedom in India. We are not free because we have not imbibed the spirit of the slogan "You and I" which was theirs. Never before in the history of their country has there been such a response from the masses. It was the direct result of that thing which is indispensable to the attainment of freedom,—inner strength.

There was a way to achieve that inner strength. They have termed it the village movement, a constructive programme.

The National Workers of India aimed at National strength. Their vision was a self-sufficient and self-contained India. It was their aim that every village should produce its own food, clothing and necessities to lead a cultured life. They did not think culture and knowledge had no place in the villages. If they were illumined by them, it would be power. True culture could be acquired only when the mother tongue is used as the medium of instruction. We Ceylonese have forsaken our heritage and we could not be proud of it. The adoption of a foreign tongue had made us intellectual slaves.

Another factor, she observed was untouchability. It had proved a great obstacle in the path of freedom. Further, woman should be granted equal rights as men. Women have proved to be equal if not better than men in India's struggle for freedom. Drink too had done much harm. They had done much to make people give up drinking. They were against drink and were for prohibition at all times. Even tea and coffee were considered by them to be intoxicants.

She concluded that they hoped to achieve all those by a system of education that would give the people political, economical, social and moral emancipation. One system of education that would give all those was the basic scheme of education.

## JAP ROYAL HOUSE

### "A Mysterious Monster"

Though the Allies, including China have agreed to the continuance of Royal rule in Japan, Chinese public opinion is strongly in favour of abolition of the emperorship.

To replace Hirohito by some other prince is no remedy, it is pointed out. Some time back the Jap war lords announced that a brother of the Emperor, one prince Chichibu, had been released from custody, and a dark hint was sent forth that this prince was a pro-Britisher and might be useful in bringing about a settlement between Japan and the Allies.

Who is Prince Chichibu? He should be known by all the people of the world. Who does not know that he is the man behind scene who gives the strongest support to the radical elements of the fascist Japanese army? The "Cherry Society", the first Japanese organization formed by 17 junior officers, was headed by Prince Chichibu He is also the one who instigated the Feb. 26 incident, which had an under current of fighting for the royal crown.

Prince Chichibu is the brother of Emperor Hirohito But as a matter of fact Hirohito's father is not Taisho but Meiji So actually they are not brothers at all, and this sows the seed of competing for the emperorship between them. The Navy and the other Conservatives support Hirohito, while the radical army officers, new capitalists and the *reformists* support Chichibu. During their long tug of war, Chichibu used to take the offensive. The Feburary 26 incident and other series of terrorist actions were all instigated either to assassinate Hirohito or to eliminate those who are close to Hirohito preparatory to placing Chichibu on the throne. Under the influence of Chichibu there gathers a throng of radical officers, ronins, munition capitalists, and reactionary bureaucrats and politicians who are responsible for the present war.

After the war had been started, Chichibu continued to go on with his scheme of dethroning the Emperor. That was why Chichibu has been under the custody of the royal house. Had Chichibu succeeded in his plot and become the Emporor of Japan. he would be a real "Hitler of Japan". a capable, dictatorial and cruel fascist leader.

### No Royal House

We do not ,understand why those people, who perfer to preserve the Japanese emperorship, should hold on an emperor as the ornament of peace. We have not the slightest liking for the Japenese royal house, and we are always convinced that a total peace must include the abolition of the Japanese emperorship, says the Chinese newspaper *Ja Kung Pao.*

First, the Japanese emperorship is the principal source, and the spiritual citadel of Japanese fascism. It is most reactionary and against democracy and liberalism. It is a most mysterious monster which blocks the progress of the history. Look at the "suicide squadrons" of the Japanese armed forces, they derive their spiritual inspiration from the Emperor. All the Japanese militaristic and aggressive policies are based on this mysterious system of emperorship. Do we not prefer to eliminate fascism? Do we think that there is still not enough bloodshed and we should preserve the source of disaster for our younger generations?

Second, the theory that Japan can only be ruled through an emperor is on erroneous conception. The Japanese propagandists and those who believe in the divinity of the Japanese Emperor have twisted the history of Japan. Actually in the history of Japan, the Emperor is a most pitiful being. All the crime, the ugliness and chaos of feudal royalty can be found in the Japanese royal house. There are many instances in Japanese history where an emperor was killed by a civil servant, or the sovereignty was held by an outsider. There were also cases of dictatorial rule by military sects, and the capture and the exile of emperors. Therefore, why should the emperorship not be abolished? What is the value of preserving the royal house?

### Sheer Stupidity

Third, from the jurisdictional point of view, we should also insist on the abolition of Japanese emperorship. No one would oppose that Hirohito should be condemned the same as Hitler. Some one may argue that based on the interpretation of the Atlantic Charter, the internal structure of a nation should be decided by its own people. But if some one else suggests that we should allow the German people to choose their own political system and see whether they would support Nazism. And suppose the German people did prefer the Nazi political system, shall we also acknowledge it or not? Does this mean the respect of their freedom and the observation of the regulation of the Atlantic Charter? This is absurd. Because what we have been fighting against is not only Nazi but also the Nazi political structure.

It is the same with the Far East. If we propose that after the overthrowing of Hirohito and the condemnation of the Japanese militarists, the emperorship should be allowed to exist, the stupidity will be equal to cutting the leaves of a tree without doing any harm to its trunk and presuming that the tree has been killed. —*The Sunday Herald.*

THE
JAFFNA FORAGE STORES
(CATTLE FOOD DEALERS)
MAIN STREET, JAFFNA

WHY WORRY FOR YOUR CATTLE FOOD?

We are supplying Horse Food, Cow Food, Goats Food and Bull Mixtures at cheap rate.

These mixtures consisting of Paddy Bran, Oats, Maize, Peas, Ulundu, etc, are cheaper than Poonac and Paddy Bran.

A TRIAL WILL CONVINCE YOU.

*Price-list can be had on application.*

T. RAJARATNAM,
(Law Librarian)
*Proprietor.*

34—24 H.

*Centralise your shopping at "The Premier"*

FRESH STOCKS OF TINNED PROVISIONS
DISTRIBUTED BY THE FOOD SUPPLY DEPT.

AVAILABLE — WHOLESALE AND RETAIL.

OUR PATRONS are assured
OF
A VARIED SELECTION OF TINNED MEATS, JAMS, CANNED FRUITS, COCOA, CORDIALS, PICKLES, SAUCES, AUSTR. HONEY, ETC., ETC.

OUR PRICES DEFY COMPETITION

PREMIER STORES
GROCERS AND GENERAL MERCHANTS
MAIN STREET, JAFFNA.

Printed and published for the American Ceylon Mission by Mr. V. Joseph Arianayagam, residing at Tellippalai, at the American Ceylon Mission Press, Tellippalai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org